Paper ID: IC03

# போர்த்துக்கேயர்கால இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கைகள் வட இலங்கையினை அடிப்படையாகக்கொண்ட ஒரு வரலாற்று நோக்கு

**பேராசிரியர் கலாநிதி. க. அருந்தவராஜா**

இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பலகலைக்கழகம்
arunn.msu@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் பேசும் மக்களை அதிகளவில் உள்வாங்கிக்கொண்ட (ஏறத்தாள 97சதவீதம்) வடஇலங்கையினைப் பொறுத்தவரை அதனது வரலாற்றில் இஸ்லாமிய மக்களுக்கென (ஏறத்தாள 3.22சதவீதம்) தனியானதொரு சிறப்பும் வரலாற்றுப் பாரம்பரியமும் உண்டெ ன்பதனை எவரும் மறுக்க முடியாது. பொதுவாகவே இவர்கள் தனியானதொரு இனக்குழுவாகக் காணப்பட்டிருந்தாலும்கூட இலங்கையில் அதுவும் குறிப்பாக வடஇலங்கையில் தமிழையே அவர்கள் தங்களது தாய் மொழியாகக் கொண்டுள்ளனரென்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் ஆரம்பகால இஸ்லாமியர்களது வருகை, அவர்களது ஆரம்பகால குடியேற்றங்கள் என்பவை தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் இருந்து வருவது போலவே வடஇலங்கையிலும் இவர்களது மேற்கூறப்பட்ட விடயங்கள் சம்மந்தமாக முரண்பட்ட தகவல்களே உள்ளன. இருப்பினும் வடஇலங்கையில் இவர்களது ஆரம்பகால குடியேற்றங்கள் யாழ்ப்பாண அரசர்களது காலமான ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தில் (கி.பி.13ஆம் நூற்றாண்டு) நல்லூரினை அண்டிய பிரதேசங்களில் பரவலாகக் காணப்பட்டமைக்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன. ஆரம்பகாலங்களில் வர்த்தக நோக்குடனேயே இலங்கைக்கு வருகைதந்த இவர்கள் பின்னர் படிப்படியாக வட இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் குடியேறினர். காலப்போக்கில் திருமண உறவுகளையும் வளர்த்துக்கொண்டு நிரந்தரக் குடிகளாயினர். .ஐரோப்பியரது வருகைக்கு முன்னரான காலப்பகுதியில் வடஇலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் யாவுமே யாழ்ப்பாண அரசர்களது மேற்பார்வையின் கீழ் இஸ்லாமியர்களது கட்டுப்பாட்டின் கீழேயே இருந்து வந்தது. ஆனால் ஐரோப்பியர்களான போர்த்துக்கேயரது வடஇலங்கையினைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமையினைத் தொடர்ந்து (கி.பி.1619) வடஇலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளைப் போர்த்துக்கேயர் தாமே கையேற்று அவற்றினை நடாத்த முற்பட்டதனைத் தொடர்ந்து வடஇலங்கையில் மட்டுமன்றி முழு இலங்கையிலும் வாழ்ந்துவந்த இஸ்லாமியர்களது வாழ்வில் இருண்டகாலம் ஆரம்பித்ததெனலாம். இஸ்லாமிய மக்களில் அனேகர் தமது சுதந்திரத்தினை மத அடிப்படையில் மட்டுமன்றிச சகல துறைகளிலும் இழக்க நேரிட்டது. சிலர் இடம்பெயர்ந்து மலையகம் நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். இருப்பினும் போர்த்துக்கேயரது காலத்தில் முத்துக்குளித்தல், முத்து வர்த்தகம் மற்றும் யானை வர்த்தகம் போன்ற வடஇலங்கையில் இஸ்லாமியர்களது பாரம்பரியத் தொழில்களான இவற்றினை இஸ்லாமியர்களை விலக்கி வைத்துவிட்டு அவர்களால் திறம்பட செய்ய முடியவில்லை. ஆகையால் விரும்பியோ விரும்பாமலோ போர்த்துக்கேயரது காலத்தில் அவர்கள் இஸ்லாமியர்களை மேற்குறித்த தொழில்களில் ஈடுபடுத்த வேண்டியகட்டாயத்திலிருந்தனர். இப்பின்னணியிலேதான் அக்காலப்பகுதியில் இஸ்லாமியர்களும் இத்தொழில்களில் ஈடுபட்டுப் போர்த்துக்கேயரது பொருளாதார உயர்விற்கு வழிவகுத்தனர். சிலர் விவசாயிகளாகவும், மீனவர்களாகவும் திகழ்ந்தனர். வேறு சிலர் உள்நாட்டில் பல்வேறு கைத்தொழில்களைச் செய்தனர். மொத்தத்தில் வடஇலங்கையில் போர்த்துக்கேயரது பொருளாதார உயர்விற்குப் பக்கபலமாக இருந்தவர்களில் இஸ்லாமியர்களுக்கும் குறிப்பிட்டதொரு

பங்கு உண்டென்பதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். (சிற்றம்பலம்,சி.க.1996) முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விவரண ஆய்வாக அமையப்பெற்ற இவ்வாய்வானது போர்த்துக்கேயர்கால இஸ்லாமிய மக்களது பொருளாதார நடவடிக்கைகளை இனங்காண்பதும், அத்தகைய நடவடிக்கைகள் வடஇலங்கையின் போர்த்துக்கேயரது கால பொருளாதார வளர்ச்சிக்கு எவ்விதமான பங்களிப்பினைச் செய்திருந்ததென்பதனையும், வருங்கால ஆய்வாளர்களுக்கு இவ்விடயமாக மேலதிகமான தகவல்களை வழங்கி அவற்றினை ஆவணப்படுத்துவதனையும் பிரதான நோக்கங்களாகக் கொண்டுள்ளது. மேலும் இப்பகுதி தொடர்பாக இதுவரை எவரும் விரிவாக ஆராயவில்லை என்ற குறைபாட்டினையும்கூட இவ்வாய்வானது நிறைவு செய்கின்றது. இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வினது தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்கள் வரிசையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கால இலக்கியங்கள், குறிப்புக்கள், அறிக்கைகள், கடிதங்கள் போன்றவை பிரதான இடத்தினைப் பெற்றுள்ளன. முதற்தர ஆதாரங்களை அடிப்படையாக வைத்துப் பிற்பட்ட காலங்களில் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள்,பத்திரிகைகளது செய்திகள்,இணையத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் இரண்டாம்நிலை ஆதாரங்கள் வரிசையிலும் இடம்பிடித்துள்ளன. பொதுப்படப் பார்த்தால் போர்த்துக்கேயர்கால வடஇலங்கையின் பொருளாதாரத்தில் இஸ்லாமியர்களது பங்கினைக் குறைத்துச் சொல்ல முடியாது. அவ்வகையில் அக்காலப்பகுதியில் இஸ்லாமியரது ஆதரவுடனேயே போர்த்துக்கேயர் தமது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பினரென்பது வெள்ளிடைமலை.(சிற்றம்பலம்,சி.க.1995)

**திறவுச்சொற்கள் :** ஆரம்பகால இஸ்லாமியக் குடியேற்றங்கள், போர்த்துக்கேயர், பொருளாதாரச் சுரண்டல், முத்து வர்த்தகம், யானை வர்த்தகம்

**அறிமுகம**

இலங்கையின் அமைவிடத்தினது முக்கியத்துவம் காரணமாக புராதன காலந்தொடக்கம் இலங்கையுடன் பல்வேறு நாட்டவர்களும் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். அவ்வகையிலேதான்இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னதாகவே அராபியர்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவானது இருந்தவந்தபோதும்கூட இத்தகைய உறவானது இரு பகுதியினருக்கும் இஸ்லாத்தின் பின்னராகவே நெருக்கமடைந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் வடஇலங்கையுடனான இவர்களுக்கு இருந்த தொடர்பு பற்றிய அறியக்கூடிய உறுதியான தகவல்கள் மிகவும் பிற்பட்ட காலத்திற்குரியவையாகவே உள்ளன. இத்தகைய பிற்பட்டகாலத்தில் வட-இலங்கையுடன் இவர்கள் கொண்டிருந்த உறவினது பின்னணியிலேதான் இஸ்லாமியக் குடியேற்றங்கள் இப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும் பரவலாக ஏற்பட ஆரம்பித்தன. ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தில் செல்வாக்குடன் இப்பகுதிகளில் வாழ்ந்துவந்த இஸ்லாமியர்கள் போர்த்துக்கேயரது காலத்தில் அவர்களது பொருளாதார நடவடிக்கைக்குப் பக்கபலமாக இருப்பதனைத் தவிரவேறு எவற்றினையும் செய்ய முடியாதவர்களாகக் காணப்பட்டனர்.போர்த்துக்கேயர் இஸ்லாமியர்களை தம்வசப்படுத்தி அவர்களின் ஊடாகத் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேலும் விரிவாக்கினர். தொடர்ந்து இஸ்லாமியரது வியாபார தனிஆதிக்கத்திற்கு முட்டுக்கட்டை போடப்பட்டது. அவ்வகையில் இஸ்லாமியர்களது பாரம்பரியமான வர்த்தக நடவடிக்கைகளான முத்துக்குளித்தல், முத்து வர்த்தகம்,யானை வர்த்தகம் போன்றவற்றினை போர்த்துக்கேயரது கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்ள வேண்டியவராயினர்.அதேநேரத்தில் இவர்களது ஆதரவில்லாமல் ஆரியச்சக்கரவர்த்திஅரசர்களது காலத்திலும் சரி போர்த்துக்கேயரது காலத்திலும் சரி வடஇலங்கையின் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதென்பது முடியாத காரியமாகக் காணப்பட்டது. மற்றபடி எவ்விதமான சுதந்திரங்களும்

போர்த்துக்கேயரது காலத்தில் இஸ்லாமியருக்குக் கிடைக்கவில்லையென்பதே உண்மை. (அப்துல் அஸீஸ்,எல்.எம்.1907)

**வடஇலங்கை நோக்கிய ஆரம்பகால இஸ்லாமியக் குடியேற்றங்கள்**

ஏறத்தாள இலங்கையில் சுமார் 1000 வருடகால பூர்வீகத்தினை இஸ்லாமியர்கள் உடையவர்கள் என்பது பொதுவாக இஸ்லாமிய அறிஞர்கள் பலரிடமும் காணப்படுகின்ற கருத்தாக உள்ளது. (இத்ரீஸ்,ஏ.பி.எம். 2011) அதேநேரத்தில் வடஇலங்கையில் இவர்களது பூர்வீகம் தொடர்பாக அறிவதற்கான உறுதியான ஆதாரங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. அதிலும் இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் பற்றிய விபரங்கள் மிகவும் பிற்பட்ட காலத்திற்குரியவையாகவே. பின்வந்தவர்களுக்கு எவ்விதமான வரலாற்று ஆதாரங்களையும் இஸ்லாமியர்கள் விட்டுச்செல்லாததன் பின்னணியில் பெருமளவிற்கு கர்ணபரம்பரைக் கதைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே இவர்கள் ஆரம்பகால வரலாறு இலங்கையில் நோக்கப்படுகின்றது.

வடஇலங்கைப் பிரதேசமானது தனக்கெனத்தொரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்ட பிரதேசமாக காணப்படுகின்றமையினை இலக்கியங்களும் அப்பிரதேசங்களில் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொல்லியல் ஆய்வுகளும் எடுத்தியம்புகின்றன. அவ்வகையில் தமிழ்மக்களைப் பெரும்பான்மையாகாக் கொண்ட பல்லினச் சமூகத்தினை உள்ளடக்கியுள்ள வடஇலங்கைப்பிரதேசத்தில் ஏற்கனவே கூறியவாறு இஸ்லாமிய மக்களுக்கென இச்சமூகத்தில் தனியானதொரு சிறப்பும் அவர்களுக்கென நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியமும் உண்டென்பதனையும் மறுப்பதற்கில்லை. வடஇலங்கைக்கு இஸ்லாமியர்களது வருகைஇ அவர்களது ஆரம்பகால குடியேற்றங்கள் என்பவை தொடர்பாகப் பல்வேறு கருத்துமுரண்பாடுகள் அறிஞர்களுக்கிடையிலே காணப்பட்டாலும்கூட யாழ்ப்பாணத்துத் தமிழ் அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்துடன்தான் (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் வடஇலங்கையில் நல்லூரினை அண்டிய பிரதேசங்களில் காணப்பட்டமைக்கான உறுதியான ஆதாரங்கள் காணப்படுகின்றன. (Queyroz, Fernao De.1930)

மேலும் இஸ்லாமியர்களது குடியேற்றங்கள் இக்காலப்பகுதியில் மிருசுவில்இ சாவகச்சேரிஇ கொடிகாமம்இ எழுதுமட்டுவாள்இஅலுப்பாந்திஇ பருத்தித்துறைஇ ஆனைக்கோட்டை ஆகிய பிரதேசங்களிலும் காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் உள்ளன. பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் போன்றவர்கள் கிபி 8ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிலும், வடஇலங்கையிலும் சில இஸ்லாமிய குடியேற்றங்கள் காணப்பட்டதை கைலாயமாலை மற்றும் வையாபாடல் போன்ற இலக்கியங்களை ஆதரமாக கொண்டு குறிப்பிடுகின்றதனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.(சிற்றம்பலம் இ சி.க.1992), (சபாநாதன்,குல. 1949)இ(நடராசா.க.செ.1980)

பொதுவாக வரலாற்று அறிஞர்கள் இலங்கையில் வாழ்கின்ற இஸ்லாமிய மக்கள் சமூகத்தில் இரண்டு பிரதான பிரிவுகள் இருப்பதாகக் கூறுவர். முதலாவது பிரிவினர் இலங்கைஇஸ்லாமியர்களாகவும் மற்றைய பிரிவினர் மலாயர்களாகவும் அவர்களினால் இனங்காணப்படுகின்றனர். பின்னாளில் தமிழ்ப் பண்பாட்டில் ஊறிய இவர்கள் தற்காலம்வரை தங்களது மத பண்பாட்டு அடையாளங்களை விட்டுக்கொடுக்காதவர்களாய் வாழ்ந்து வருகின்றனர். இப்பின்னணியிலேதான் பெரும்பாலான இலங்கை இஸ்லாமிய மக்களின் பிரதான மொழியாகத் தமிழ் விளங்குகின்றதெனலாம். இவர்கள் தமிழ்மொழியினைத் தாய்மொழியாக கொண்டமைக்குத் தென்னிந்திய இஸ்லாமிய மக்களது இலங்கை மீதான செல்வாக்கும் ஒரு காரணமெனலாம். குறிப்பாகத் தென்னிந்திய இஸ்லாமிய மக்களுடன் இலங்கை இஸ்லாமிய மக்களுக்கிருந்த வர்த்தகத்

தொடர்பே இச்செல்வாக்கு இலங்கையில் வளர்வதற்கு முக்கியமான காரணியாக அமைந்திருந்தது. அக்காலப்பகுதியில் இலங்கையில் காணப்பட்ட வளங்களால் கவரப்பட்ட அராபியர்கள் இலங்கையினை இரத்தினத்துவீபம்இ செரண்டிப் போன்ற பெயர்களினால் அழைத்தமையும் இங்கு குறிப்பிடதக்கது.பொதுப்பட இலங்கைவாழ் இஸ்லாமியர்களது வரலாறானது இந்துசமுத்திரத்தினது வர்த்தகத்தின் பின்னணியில் வைத்தே பார்க்கப்படுகின்றமை வழமையாகும். (அப்துல் ரஹீம்.எம்.எஸ்.2009)

**போர்த்துக்கேயரது வடஇலங்கை வருகை**

கீழைத்தேய நாடுகளுக்கு வருவதற்கான கடல்மார்க்கப்பாதையினை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் முதலில் வெற்றிபெற்ற போர்த்துக்கேயர்கள் 1498இல் வாஸ்கொடகாமவின் தலைமையில் இந்தியாவின் கள்ளிக்கோட்டையினை வந்தடைந்தனர். தொடர்ந்து கோவாவினைத் தங்களது கீழைத்தேய ஆதிக்க நடவடிக்கைகளுக்குத் தலைமையகமாக மாற்றிக்கொண்ட இவர்கள் அதற்கான செயற்பாடுகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர்.இதன் ஒரு கட்டமாக 1505இல் இலங்கையின் கரையோரங்களில் எதிர்பாரதவிதமாக காலடி பதித்த போர்த்துக்கேயர்கள் தொடர்ந்து 1658 வரை அப் பகுதிகளில் தங்களது செல்வாக்கினை நிலைநாட்டிக்கொண்டனர்.பொதுப்பட இலங்கைவாழ் இஸ்லாமியர்களின் வரலாற்றில் போர்த்துக்கேயரது வருகையானது ஒருதிருப்புமுனைக் காலம் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

போர்த்துக்கேயரது இந்துசமுத்திர வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பொது எதிரியாக இஸ்லாமியர் விளங்கியதாகவும் வெளிநாட்டு வர்த்தகத்தில் இஸ்லாமியருக்கு ஏற்கனவே இருந்துவந்த செல்வாக்கானது போர்த்துக்கேயரைப் அச்சமடையச் செய்ததாகவும் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு என்ற நூலில் சி.மங்களரூபி குறிப்பிடுகின்றார். (மங்களரூபி,சி.2016) போர்த்துக்கேயர்கள் இலங்கை வந்த காலப்பகுதியில் இலங்கையானது மூன்று பெரும் பிரிவுகளாக கோட்டைஇ கண்டிஇயாழ்ப்பாணம் எனப் பிரிக்கப்பட்டு காணப்பட்டதுடன் இவற்றுக்கிடையில் முரண்பாடுகளும் அதிகரித்திருந்தன. இலங்கையின் இத்தகைய குழப்பகரமான அரசியல் சூழ்நிலையினைத் தங்களது ஆதிக்க விஸ்தரிப்புக்குச் சாதகமான வகையில் பயன்படுத்திக்கொண்ட போர்த்துக்கேயர்கள் படிப்படியாக இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றி இறுதியாக வடஇலங்கையினையும் 1619இல் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். (Silva,K.M.De.1981)

போர்த்துக்கேயர்களின்நடவடிக்கைகள் இலங்கையில் விரிவுபடுத்தப்பட்டமைக்கு வெறுமனே பொருளாதார மற்றும் மதம் பரப்புகின்ற காரணிகள் மட்டுமன்றி அரசியல் சார்ந்த காரணிகளும் அவர்களது நடவடிக்கைகளில் ஏராளமாகவே நிறைந்திருந்தன.இலங்கையின் தென்பகுதியில் காணப்பட்டதனைப் போன்று கறுவா போன்ற வாசனைப்பொருட்கள் வடஇலங்கையில் காணப்படாத போதும் இலங்கையின் வட பகுதியில் மன்னாரின்கேந்திர முக்கியத்துவமானது அவர்களது இராணுவ மற்றும் வர்த்தக செயற்பாடுகளுக்கு அவசியமான வகையில் அமைந்திருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக மன்னாரின் முத்துக்கள் போர்த்துக்கேயர்களைக் கவர்ந்திழுத்திருக்குமென்பதில் எதுவிதமான சந்தேகமுமில்லை. ஆரம்பத்தில் கோட்டை இராட்சியத்துடன் 1505இல் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட போர்த்துக்கேயர்கள் ஏறத்தாள 38வருடங்களின் பின்பாகவே யாழ்ப்பாண அரசுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு முனைந்தனர்.(குணசிங்கம், மு. 2008)இத்தகைய காலதாமதத்திற்கு அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தினை ஆட்சிசெய்த அரசர்களின் கடுமையான எதிர்ப்போ அல்லது போர்த்துக்கேயர்களுக்கு இப்பகுதிகள் அக்கால வரையறைக்குள் அரசியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தினை பெற்றுக்கொள்ளாமையோ காரணங்களாக அமைந்திருக்கலாம். இருப்பினும் வடஇலங்கையினைக் கைப்பற்றிக்கொள்ளுவதற்கான

சந்தர்ப்பத்தினை அவர்கள் எப்போதும் எதிர்பார்த்திருந்தனரென்பது மட்டும் உண்மை.அவ்வகையில் ஏற்கனவே குறிப்பிட்டதனைப் போன்று போர்த்துக்கேயர் வடஇலங்கையினைக் கைப்பற்றிய காலந்தொடக்கம் வடஇலங்கையில் வாழ்ந்த இஸ்லாமியர்களது வாழ்க்கையில் ஓர் இருண்டகாலமும்கூடவே ஆரம்பித்தது.

போர்த்துக்கேயர் தாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் இஸ்லாமிய மக்களுக்குத் தொல்லை கொடுப்பவர்களாகவே இருந்து வந்துள்ளனர். (பத்மநாதன்,சி.2002) வடஆபிரிக்காவிலுள்ள மூவர்ஸ் எனப்பட்ட முஸ்லிம்கள்தான் இலங்கையில் வந்து குடியேறியிருக்க வேண்டுமென எண்ணி இங்கிருந்த இஸ்லாமிய மக்களை மூவர்ஸ் எனப் போர்த்துக்கேயர் அழைத்தனர். போர்த்துக்கேயர்கால இலங்கை வரலாற்றினை எழுதியர்களில் குவைறோஸ் சுவாமியினைத் தவிர பெரும்பாலானவர்கள் இராணுவத்துடன் சம்மந்தப்பட்டவர்களாகக் காணப்பட்டதனால் அவர்கள் சிங்களமக்களையும் போர்த்துக்கேயரையும் நாட்டில் முரண்பட வைத்தவர்கள் இஸ்லாமிய மக்களெனத் தங்களது குறிப்புக்களில் தெரிவித்திருந்தனர். குவைறோஸ் சுவாமிகூட இலங்கையிலிருந்து போர்த்துக்கேயர் விரட்டியடிக்கப்பட இஸ்லாமியரே காரணமென்ற தொனிப்பில் கருத்துக்களைத் தனது குறிப்பில் தெரிவித்திருந்தமை அவதானிக்கத்தக்கது.(Queyroz, Fernao De.1930)

**வர்த்தக நடவடிக்கைகள்**

பொதுவாகவே இஸ்லாமியர்களுக்கும் வர்த்தகத்திற்கும் இடையிலே நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. அவ்வகையில் ஐரோப்பியரது இலங்கை வருகைக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து வடஇலங்கையிலும் சரி முழு இலங்கையிலும் சரி வர்த்தகத்தில் செல்வாக்குப் பெற்ற பிரிவினர்களாகவே இஸ்லாமியர்கள் காணப்பட்டனர். அதாவது யாழ்ப்பாணத்து அரசர்களுடைய காலத்தில் அவர்களது மேற்பார்வையில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் இவர்களது கைகளிலேயே இருந்து வந்துள்ளது.இவர்கள் யாழ்ப்பாண அரசர்களது காலத்தில் அவர்களது அந்தரங்கச் செயலாளர்களாகவும், படை வீரர்களாகவும. வைத்தியர்களாகவும்கூட பணியாற்றியுள்ளனர். அக்காலப்பகுதியில் இவர்கள் யானை வர்த்தகம், முத்து வர்த்தகம், முத்துக்குளித்தல். வாசனைப் பொருட்களின் வியாபாரம் என்பனவற்றில் ஈடுபட்டு வந்துள்ளனர். சமகாலத்தில் விவசாயிகளாகவும் மீனவத்தொழிலை மேற்கொண்டும் சில இஸ்லாமியர்கள் தமது வாழ்வாதாரத்தினைப் பெருக்கினர். (பத்மநாதன்,சி.2001) மேற்கூறப்பட்ட வர்த்தகச் செயற்பாடுகளில் சிறப்பாக ஈடுபட்டுவந்த இஸ்லாமியர்களுக்கு போர்த்துக்கேயரது வருகையுடன் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு நெருக்கடிகளின் காரணமாக ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

ஏற்கனவே இஸ்லாமியர்களுடன் வர்த்தக ரீதியில் முரண்பாட்டினைக் கொண்டிருந்த போர்த்துக்கேயர் வடஇலங்கையில் இஸ்லாமியர்களின் கைகளிலிருந்த முத்து வர்த்தகம், யானை வர்த்தகம், ஆடம்பரப் பொருட்களின் வர்த்தகம் போன்றவற்றினைக் கண்டு பொறாமை அடைந்தனர். போர்த்துக்கேயரது வருகையினைத் தொடர்ந்து தென்னிந்தியாவிலிருந்து வர்த்தகம் காரணமாக இலங்கையில் வந்து குடியேறியிருந்த தென்னிந்திய இஸ்லாமிய மக்களில் வடஇலங்கையிலிருந்தவர்கள் மட்டுமன்றி இலங்கையின் பிற பகுதிகளில் வாழ்ந்தவர்களும் போர்த்துக்கேயரது தொந்தரவு இல்லாத பகுதிகளுக்குச் செல்ல முற்பட்ட நேரத்தில் போர்த்துக்கேயர் தமது வர்த்தக நலன்களைக் கருத்தில் கொண்டு இவ்விடயத்தில் தலையிட்டு இஸ்லாமிய மக்களுக்கு எவ்விதமான ஆபத்தும் தங்களால் ஏற்படாதென அவர்கள் இஸ்லாமியருக்கு வாக்குறுதியளித்திருந்தனர்.(அப்துல் அஸீஸ். எல்.எம். 1907) இது தமது பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு இராஜதந்திர அடிப்படையில் போர்த்துக்கேயரால் வகுக்கப்பட்ட திட்டமாயினும்

இது ஒரு தற்கால ஏற்பாடகவே காணப்பட்டது. இருப்பினும் இது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. காரணம் அடிக்கடி இஸ்லாமியருக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் திட்டங்களை மாற்றிவந்தமையால் அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

**யானை வர்த்தகம்**

யானை பிடித்தல் மற்றும் வர்த்தகம் செய்தல் ஆகிய தொழில்கள் வடஇலங்கையில் வாழ்ந்த இஸ்லாமிய மக்களில் ஒரு பிரிவினரின் பாரம்பரிய தொழில்களிலொன்றாக நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளது. குறிப்பாக இது யாழ்ப்பாண அரசர்களது காலத்திலிருந்து அவர்களது பிரதான தொழில்களிலொன்றாக இருந்துவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே ஒரு இடத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் போர்த்துக்கேயரைப் பொறுத்தவரை அவர்கள் இஸ்லாமிய மக்களின்பால் மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தாலும்கூட தமது பொருளாதார உயர்விற்கு இவர்கள் அவசியமென்பதனை உணர்ந்து 16ஆம் நூற்றாண்டுவரை அவர்கள் இஸ்லாமியருக்கு எதிராகக் கடைப்பிடித்துவந்த தொகையில் மாற்றங்கள் சிலவற்றினை ஏற்படுத்தினர். வடஇலங்கையில் இக்கொள்கையில் தளர்வுநிலை சற்று அதிகமாகவே காணப்பட்டதெனலாம்.

16ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் போர்த்துக்கேயர்கள் அதுவரை காலமும் கடைப்பிடித்துவந்த இறுக்கமான இஸ்லாமிய மக்கள் மீதான கொள்கையில் மாற்றங்கள் சிலவற்றினை ஏற்படுத்தியதனால் இக்காலப்பகுதியில் இலங்கை முழுவதிலும் தடையில்லா வியாபார உரிமையினையும், குடியிருப்பதற்கான உரிமையினையும் இவர்கள் பெற்றிருக்க வேண்டும். அதேநேரத்தில் பதிலுக்கு இக்காலப்பகுதியில் இஸ்லாமிய மக்களும் போர்த்துக்கேயருடன் மோதல்களைத் தவிர்த்து ஒத்துப்போகின்ற தன்மைகள் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இருப்பினும் இது நீடிக்கவில்லை. 17ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்த காலத்தில் வட இலங்கையில் இஸ்லாமிய மக்களது தொகையானது அதிகரித்து வருவது தங்களது நலன்களுக்கு எதிரானதென்ற எண்ணம் போர்த்துக்கேயரின் மத்தியில் படிப்படியாக உண்டானது. (சிற்றம்பலம்,சி.க.1992) தொடர்ந்து இலங்கையிலிருந்து இவர்களை நாடு கடத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் கோவாவிலிருந்து 1620இல் மன்னாருக்கு அனுப்பப்பட்ட அறிக்கை அவர்களுக்கு எதிரான தடைகளை மீண்டும் தளர்த்தும்படி செய்தது. எனினும் இலங்கையில் கொன்ஸ்ரன்ரைன்தேஸாதே நொறொஞ்ஞா தேசாதிபதியாகப் பதவியேற்றதன் பின்பாக மீண்டும் இஸ்லாமிய மக்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே இவற்றிலிருந்து இலங்கையிலுள்ள இஸ்லாமிய மக்கள் பொறுத்துப் போர்துக்கேயர் எப்போதும் நிலையான எக்கொள்கை எவற்றினையும் பின்பற்றவில்லையென்பது தெரிகின்றது.

போர்த்துக்கேயரது காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் மத்திய மாகாணம், வன்னி, மன்னார் போன்ற பகுதிகளிலும் இஸ்லாமியர்கள் யானைகளைப் பிடிப்பதிலும், அவற்றினை விநியோகம் செய்வதிலும், அவற்றினைக் கொண்டு வேலை வாங்குவதிலும் ஈடுபட்டிருந்தனர். (அருந்தவராஜா,க.2012) இவர்களில் பலர் பாரம்பரியமாகவே இத்தொழிலில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது நுட்பமான தொழிலும்கூட. இவர்கள் யானைகளைப் பழக்கிய பின்னர் போர்த்துக்கேய அரசாங்கத்துக்கோ அல்லது பிற நாடுகளுக்கோ அவற்றினை விநியோகம் செய்தனர். அக்காலப்பகுதியில் ஊர்காவற்றுறை. பருத்தித்துறை, மன்னார் போன்ற துறைமுகங்களின் ஊடாகவே இவர்களினால் வெளிநாடுகளுக்கு யானைகள் அனுப்பப்பட்டிருந்தன. பதிலுக்கு குதிரைகளைக் கொடுத்து யானைகளைப் பண்டமாற்றுச் செய்கின்ற வியாபார நடவடிக்கைகளிலும் இவர்கள் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

சிலபிரதேசங்களில் அவர்கள் அங்கு வாழ்ந்துவந்த தமிழ் மக்களுடன் இணைந்த வகையிலேதான் தமது யானை வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஏனெனில் சமகாலத்தில் வன்னிப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் யானைகளைப் பிடித்துப் பிற பகுதிகளுக்கு அனுப்பியமைக்கான ஆதாரங்களும் உள்ளன. வடஇலங்கையில் காணப்படுகின்ற ஊர்ப்பெயர்களான ஆனையிறவு, ஆனைப்பந்தி, ஆனைப்பாலம் போன்றவை இப்பின்னணியில் உருவான ஊரினது பெயர்களே. ஆனைப்பந்தி என்பது யானைகளைக் கட்டி வளர்க்கின்ற இடமாகவும் ஆனையிறவு யானைகளை வன்னியிலிருந்து கொண்டு வரப்படுகின்ற சந்தர்ப்பங்களில் வரிகளைப் பெறுகின்ற இடமாகவும், ஆனைப்பாலமென்பது யானைகளை ஏற்றமதி செய்கின்ற இடமாகவும் வரலாற்றில் பேசப்படுகின்றது. யானை வர்த்தகத்திற்கு எனப்பருவகாலம் எவையும் கிடையாது. எக்காலத்திலும் இஸ்லாமிய மக்களின் உதவியுடன் இத்தகைய யானை வர்த்தகத்தின் மூலமாகப் போர்த்துக்கேயருக்கு வருவாய் கிடைத்தது. (அருந்தவராஜா,க.2012)

போர்த்துக்கேயரது காலப்பகுதியில் யானை வர்த்தகத்தில் இஸ்லாமியர்களுடன் வன்னியர்களெனப்பட்ட வன்னிப் பகுதிகளில் வாழ்ந்தவர்களது பங்கும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருந்ததெனலாம். தற்காலத்தில் இப்பகுதிகள் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசங்களாகக் காணப்படுகின்றது. உண்மையில் வடஇலங்கைக்கு வருவாயினைப் பெற்றுத்தந்த மூலங்களிகளில் யானை வர்த்தகமும் பிரதான இடத்தில் வைத்துப்பேசப்பட்டிருந்தாலும்கூட யாழ்ப்பாண நகரத்திற்கு வெகுதொலைவில் காணப்பட்ட வன்னிப் பிரதேசங்களிலிருந்தே இவை அதிகளவில் கிடைத்தன. இருப்பினும் இவர்கள் வாழ்ந்த பகுதியின் பூர்வீக வரலாறானது பெருமளவிற்கு தொல்லியல் ஆதாரங்களை நம்பியதாகவே உள்ளமை கவனிக்கத்தக்கது. இவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளுக்கும் போர்த்துக்கேயருக்கும் வருடா வருடம் வரிகளைக் கட்டியதாகவும் போர்த்துக்கேயரது படையெடுப்புக்கள் வடஇலங்கை நோக்கி நடைபெற்ற சமயங்களில் முள்ளியவளை, பனங்காமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வன்னியர்கள் யாழ்ப்பாண இராச்சியத்திற்குப் படை உதவிகளை அளித்ததாகவும் தகவல்கள் காணப்படுகின்றன. (பத்மநாதன்,சி.2014) வன்னிப் பிரதேசமானது அதிகளவான காடுகளைக் கொண்ட பகுதிகளாகவும் அதேநேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து தொலைவில் காணப்பட்டதனாலும் அதனை போர்த்துக்கேயரது காலத்தில் அவர்களால் நேரடியாக நிர்வாகஞ் செய்ய முடியவில்லை. இஸ்லாமியர்களைப் போன்றே வன்னியர்களும் யானைகளைப் பிடிப்பதற்கென்றே சிறப்பான பயற்சி பெற்றவர்களாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இங்கிருந்த சிற்றரசர்கள் பலர் யானைகளைப் பிடித்து அவற்றினை இஸ்லாமியர்களின் ஊடாகப் போர்த்துக்கேயருக்குத் திறையாகக் கொடுத்தனர். இத்தகைய வன்னியர்களுடன் தொடர்புகளை வைத்திருந்த இஸ்லாமியர்களில் சிலர் அவர்களுக்கும் யாழ்ப்பாண அரசர்களுக்கம் இடையிலே இவ்வியாபாரம் பொறுத்த இணைப்புப் பாலமாகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திறையாகப் பெறப்பட்ட யானைகளைப் போர்த்துக்கேயர் தென்னிந்தியா உள்ளிட்ட பிற நாடுகளுக்கு விற்பனை செய்வதன் மூலமாக நன்மையடைந்தனர்.குறிப்பாக தென்னிந்கியாவிற்கே இவை அதிகளவில் அனுப்பப்பட்டன. சமகாலத்தில் காணப்பட்ட தென்னிந்திய அரசுகளிலும் வங்காளத்திலும் இவை போர்களுக்கே அதிகளவில் பயன்படுத்தப்பட்டன. இருப்பினும் இவற்றினை விடவும் பிற தேவைகளின் நிமித்தமாகவும் யானைகள் பழக்கியெடுக்கப்பட்டன.பாரங்களை தூக்குவதற்கும் அவற்றினை இழுப்பதற்கும் இவை பயன்படுத்தப்பட்டன. இத்தகைய முயற்சிகளில் போர்த்துக்கேயருக்கு ஆதாரவாகச் செயற்பட்டவர்களில் அனேகர் இஸ்லாமியர்களே.ஆலயங்களிலும் மக்களது வழிபாட்டிற்காகவும் மத நம்பிக்கைக்குரிய சின்னமாகவும் யானைகள் காட்சிப்படுத்தப்பட்டன.அரண்மனைகளில் பிரதானிகளது மாளிகைகளிலும் யானைகள் வைத்துப்

பராமரிக்கப்பட்டதுடன் அரசர்கள் வைபவரீதியாக உலாச் செல்கின்ற சமயங்களில் அவற்றினை தம்முடன் கூடவே அழைத்துச் செல்லுகின்ற பழக்கமும் காணப்பட்டது.(*சிவசாமி,வி.2014*) அவ்வகையில் சமகாலத்தில் யானைகள் மங்கலப்பொருளாக அரசர்களால் மதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. யானைகளைப் பிடிப்பதில் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்ட இஸ்லாமியர்கள் அவற்றினை சுரத் நகரத்தின் ஊடாக வடஇந்தியாவிற்குக் கொண்டு சென்றனர். யானைகளைக் கொண்டு செல்வதற்கான நவாய்கள் பல இஸ்லாமியரிடம் இருந்தன. இந்தியாவிலிருந்த இந்து ஆட்சியாளர்களுக்கு மட்டுமன்றி இஸ்லாமிய ஆட்சியாளர்கள் சிலருக்கும்கூட இவை ஏற்றுமதி செய்யப்பட்டதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன.(காலிதீன்,கே.எம்.எச்.(1986)

**முத்துக்குளித்தல், முத்து வர்த்தகம்**

வடஇலங்கையில் போர்த்துக்கேயர்கால இஸ்லாமியர்களது பொருளாதார நடவடிக்கையில் முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகம் போன்றன பிரதான இடத்தினைப் பெற்றிருந்தாலும் யாழ்ப்பாண அரசரது காலத்திலும் பின்வந்த போர்த்துக்கேயர் மற்றும் டச்சுக்காரர், ஆங்கிலேயரது காலங்களிலேதான் இவை மேலும் பிரபல்யம் அடைய ஆரம்பித்தன. அதுமட்டுமன்றி இஸ்லாமிய மக்களது பாரம்பரியத் தொழிலாகவும் இதனைக் கருதலாம். இவர்கள் முத்துக்குளிப்பவர்களாகவும் படகோட்டிகளாகவும் விற்பனையாளர்களாகவும் விளங்கிய அதேநேரத்தில் விற்பனையாளராகவும் காணப்பட்டதன் பின்னணியிலேதான் போர்த்துக்கேயர் இவர்களது உதவியினை முத்துக் குளித்தல், முத்து வர்த்தகம் போன்றவற்றில் எதிர்பார்த்தனர். இத்தகைய முத்துக்குளித்தல் மற்றும் முத்து வர்த்தகத்தினது வரலாறானது ஏறத்தாள 4000 வருடங்களுக்கும் முற்பட்டது. (இத்ரீஸ்,ஏ.பி.எம். 2011)

முத்துக் குளிப்பிற்கு வடஇலங்கையின் மன்னார் பிரேதசமானது பெயர் பெற்ற பிரதேசமாகக் காணப்பட்டது. இப்பகுதியில் பெருமளவு முத்துச்சிப்பிகள் விளைந்தன. இவை உள்நாட்டவர்களால் மட்டுமன்றிப் பிற நாடுகளினால் அழகுசாதனப் பொருள் என்ற அடிப்படையில் விரும்பிக் கொள்வனவு செய்யப்பட்டன. 17ஆம் நூற்றாண்டளவில் இத்தகைய முத்துக்குளிப்பின் மூலமாகப் போர்த்துக்கேயர் அதிகளவான வருவாயினைப் பெற்றுக் கொண்டனர். மன்னார் பகுதி மட்டுமன்றி வடஇலங்கையில் காணப்பட்ட தீவுப்பகுதிகளிலும் அக்காலப்பகுதியில் ஏராளமான முத்துக்கள் விளைந்தன. குறிப்பாக நயினாதீவுப் பிரதேசத்தில் இஸ்லாமியர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் பல இப்பகுதியில் நடைபெற்ற முத்துக்குளிப்புடன் இணைக்கப்பட்டே பேசப்படுகின்றன. (காலிதீன்,கே.எம்.எச்.1986) அதாவது முத்துக்குளிக்கின்ற நோக்கத்துடன் வந்த இஸ்லாமியர்களில் பலர் அக்காலப்பகுதியில் வாழ்ந்த தமிழ்பெண்களைத் திருமணம் செய்ததன் மூலமாக இப்பகுதிகளில் குடியேறி நிரந்தரமாக வாழ்ந்ததாகச் செவி வழியான கதையொன்று அத்தீவினது இஸ்லாமியர்களது வரலாற்றில் காணப்படுகின்றது. அவர்களது வழிவந்த கேரளத்து இஸ்லாமியர்களே தற்போதும் நயினாதீவில் வாழ்ந்து வருகின்றனரென்பது குறிப்பிடத்தக்கது. (அருந்தவராஜா, க.,2012)

எந்தெந்த இடங்கள் முத்துக்குளிப்பதற்குச் சிறந்த இடங்களென அரசாங்க அதிகாரிகள் அனுபவம் பெற்ற பட்டங்கட்டிகளின் உதவியுடன் இடங்களைத் தெரிவு செய்வர். மீனவர்கள் பெரிய கப்பல்களில் ஆழமான கடற் பிரதேசங்களை நோக்கிச் சென்றவுடன் முத்துக்குளிப்பில் ஈடுபடுபவர்கள் சிறிய படகுகளில் இறங்கிச் சென்று முத்துக்குளிப்பில் ஈடுபட்டனர். முத்துக்குளிப்பில் ஈடுபடுபவர்களில் அனேகமாக படகொன்றில் குறைந்தது ஐந்து பேராவது செல்வது வழமையாகக் காணப்பட்டது. படகினைச் செலுத்தவதற்கு இருவரும் கடலில் இறங்குவதற்க ஒருவரும் இறங்குபவரது கயிற்றினை இறுகப் பிடிப்பதற்கு இருவருமென அக்குழுவில் அடங்கியிருந்தனர்.(பத்மநாதன், சி.,2011)

முத்துக்குளிப்பு நிறைவடைந்ததும் முத்துச்சிப்பிகள் வெயிலில் காயவிடப்படும். தொடர்ந்து முத்துக்கள் சிப்பிகளிலிருந்தும் வேறாக்கப்பட்டத் தரம் பிரிக்கப்படும். பின்னர் தேறிய முத்துக்களில் அரைவாசியானது ஆட்சியாளருக்கென வழங்கப்படும். ஏனையவற்றினை அவர்களே வைத்துக்கொள்ளுவார்கள். பின்னர் தமக்குள் அவற்றினைப் பங்கிடுகின்ற அவர்கள் வணிகர்களுக்கு விற்பனை செய்ததுடன் அவர்களிடமிருந்து தமக்குத் தேவையான பொருட்களைப் பெற்றனர். இவர்களிடமிருந்து முத்துக்களைப் பெற்ற வர்த்தகர்கள் அவற்றினைத் தென்னிந்தியத் துறைமுகங்களுக்கு எடுத்துச் சென்றனர். முத்துக்குளிப்புத் தொடர்பான சந்தைகளில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் மீதான வரிகளின் மூலமாகவும்கூட போர்த்துக்கேய அரசாங்கத்தினது வருவாய் அதிகரித்தது.(பத்மநாதன், சி.,2011) இஸ்லாமியர்களைப் பொறுத்தவரை அவர்கள் முத்துக்குளிப்பவர்களாகவும் முத்துக்களை விற்பனை செய்பவர்களாகவும், கொள்வனவு செய்பவர்களாகவும், தரகர்களாகவும்கூட போர்த்துக்கேரது காலத்தில் தொழிற்பட்டிருந்தனர். பலர் படகோட்டிகளாகவும் விளங்கியிருந்தனர். இப்பகுதியில் காணப்பட்ட முத்துக்கள் ஆரம்பத்தில் இப்பகுதிக்கு வணிகர்களை ஈர்ப்பதற்குப் பிரதானகாரணமாக அமைந்ததாகக் கூறுகின்ற மலோனி இத்தகைய வாணிப வளர்ச்சியே இறுதியில் இஸ்லாமிய மக்களது குடியேற்றத்திற்கும் நாகரிக வளர்ச்சிக்கும் வழிசமைத்ததென்ற கருத்தினை முன்வைக்கின்றார்.(Maloney,C.,1970) வடஇலங்கையில் காணப்பட்ட கடலில் சங்குகள் குளிக்கப்பட்டன. இங்கே பெறப்பட்ட சங்குகள் அளவிற் பெரியனவாகக் காணப்பட்டன. அதேநேரத்தில் மன்னாரில் கடலிலும் சங்குகள் குளிக்கப்பட்டபோதும்கூட அங்கே எடுக்கப்படுகின்ற சங்குகள் மிகவும் ஒப்பீட்டளவில் சிறியவைகளாகக் காணப்பட்டன. (கணபதிப்பிள்ளை,க.1962)

போர்த்துக்கேயர் வடஇலங்கையினைஆக்கிரமித்த சமயத்தில் வடஇலங்கையில் காணப்பட்ட பண்ணைத்துறையில் ஏற்கனவே இஸ்லாமியர்களினால் அப்பகுதியில் பள்ளிவாசல் அமைக்கப்பட்டிருந்தமை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அத்துடன் இப்பிரதேசத்தில் முருகைக்கற்களினாலும் களிமண்ணினாலும் கட்டப்பட்டுப் பிலீ ஓடுகளினால் வேயப்பட்ட இரண்டு இஸ்லாமியர்களுடைய பண்டகசாலைகள் இருந்துள்ளன. இதற்கான அனுமதியினையும் இவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளிடமிருந்து பெற்றிருந்தனர்.(Perera,S.G.1943) எனவே அக்காலப்பகுதியில் உள்நாட்டுப் போக்குவரத்தில் முக்கியமான துறைமுகங்களிலொன்றாக விளங்கிய இத்துறைமுகத்திற்கு அண்மையில் இவர்கள் பள்ளிவாசலையும் பண்டகசாலையினையும் அமைத்திருந்தமையானது தமது வியாபார நோக்கங் கருதியே என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. இவர்கள் பகலில் பகல்வேளையில் வடஇலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் இரவில் பண்டகசாலைக்குள் முடங்கிவிட வேண்டுமென்ற கட்டுப்பாடு போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் போர்த்துக்கேயரது காலத்தில் இஸ்லாமியர்கள் நகரத்தில் வியாபாரம் செய்த பொருட்களில் முத்துக்களும் இருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம். காரணம் இக்காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் வாழ்ந்த பெண்கள் நாகரிகம்மிக்கவர்களாகவும் பெறுமதிமிக்க முத்துக்களை அணிந்தமை தொடர்பாகவும் இக்கால இலக்கியங்களில் குறிப்புக்கள் உள்ளன.

வடஇலங்கையானது போர்த்துக்கேயரது செல்வாக்கிற்கு உட்பட்ட நேரத்தில் மதுரை நாயக்கர்கள் தென்னிந்தியா மற்றும் இலங்கையில் முத்து வியாபாரத்தில் முக்கியத்துவம் பெற்ற விளங்கினர். இக்காலப்பகுதியில் இஸ்லாமிய மக்கள் சிலர் தரகு வேலைகளுடன் தொடர்புபட்டிருந்தனர். முத்துக்குளிப்பில் ஈடுபட்ட கத்தோலிக்கரிடம் குறிக்கப்பட்டளவு வரியினை இதற்காகப் பெற்ற போர்த்துக்கேயர் இஸ்லாமியரிடம் வரியினை இரண்டு மடங்க பெற்றனர். (Silva,K.M.De.1981)

**பிற பொருளாதார நடவடிக்கைகள்**

இஸ்லாமிய மக்களைப் பொறுத்தவரை அவர்கள் வடஇலங்கைப் பகுதியில் மேற்கூறப்பட்ட பிரதான அவர்களது வர்த்தக நடவடிக்கைகள் தவிர்ந்த பிற பொருளாதார நடவடிக்கைகள் சிலவற்றிலும் ஈடுபட்டு தமது வருவாயினைப் பெருக்கியதுடன் போர்த்துக்கேயருக்கு ஆதரவாக இருந்த அவர்களது பொருளாதார பலத்தினை அதிகரிக்கவும் காரணமாக இருந்தனர். குறிப்பாக வட இலங்கையின் பல பகுதிகளிலும் அவர்கள் மீனவத்தொழிலை மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக கரையோரப் பகுதிகளான நவாந்துறை, நயினாதீவு, பருத்தித்துறை. வேலணை ஆகிய பகுதிகளில் வாழ்ந்த இஸ்லாமியர்களில் அனேகர் தமது வாழ்வாதாரத்தின் பொருட்டு மீனவத்தொழிலை மேற்கொண்டிருந்தனர். சிலர் வன்னிப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.(அருந்தவராஜா,க.2012) இப்பகுதிகளில் கோடை காலத்தில் சிறுதானியங்கள் இவர்களால் பயிர் செய்யப்பட்டன. அவ்வகையில் வடஇலங்கையில் இஸ்லாமியர்கள் தனித்து வர்த்தக நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடாமல் உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (காலிதீன், கே.எம்.எச்.1986)

சாயவேர் உற்பத்தி, அதனைத் தயாரித்தல் என்பனவற்றிலும் இஸ்லாமியர்களில் சிலர் ஈடுபட்டனர். சாயம் காய்ச்சுவதிலும் சிலர் ஈடுபட்டனர். நெசவுக் கைத்தொழில் இக்காலப்பகுதியில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வந்தாலும்கூட வடஇலங்கையினது முழுத்தேவையினையும் இக்கைத்தொழிலானது முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை. இக்கைத்தொழில் பொறுத்து இஸ்லாமியர்களது பங்கானது குறைந்தளவே காணப்பட்டபோதும்கூட முடிவுப்பொருட்களை மலையகம் உள்ளிட்ட பிற பகுதிகளுக்கு எடுத்துச்சென்று சேர்ப்பதில் இவர்களது பங்களிப்பானது அதிகளவில் காணப்பட்டிருந்தது.(பத்மநாதன்,சி.2001) மேலும் பாக்கு, வாசனைப் பொருட்களை அவர்களுக்குச் சொந்தமான படகுகளில் இந்திய துறைமுகங்களுக்கு எடுத்துச் சென்றனர். பருத்தித்துணிகள், புடவை, அரிசி, கருவாடு போன்றவை அவற்றில் ஏற்றிவரப்பட்டன. பலர் நடைபாதை வியாபாரிகளாகவும் பொருட்களைக் கொண்டுசென்று வீடுகளுக்கு வழங்குபவர்களாகவும் இருந்தனர். பொதுவாக அக்காலப்பகுதியில் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகள் எல்லாமே போர்த்துக்கேயரது மேற்பார்வையில் இவர்களாலேயே செய்துகொள்ளப்பட்டமை அவதானிக்கத்தக்கது.

போர்த்துக்கேயரது காலத்தில் அராபியர்கள் இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்துகொண்டதுடன் பெருமளவிலான சொத்துக்களையும் வடஇலங்கையில் வைத்திருந்தனர். மேற்கூறப்பட்ட காரணத்தின் பின்னணியில் போர்த்துக்கேயரது வருகைக்கு முன்னரான காலப்பகுதியில் வடஇலங்கையில் இஸ்லாமியர்களது தொகையானது படிப்படியாக அதிகரித்து வந்தது. இஸ்லாமிய வியாபாரிகள் சிலர் பொதி சுமக்கின்ற மாடுகளுடன் நீண்டதூரம் சென்று வர்த்தகத்திலீடுபட்டனர். இத்தகைய பொதிமாடுகள் தொடர்பான குறிப்புக்கள் சில அக்காலத் தோம்புகள் பலவற்றில் உள்ளன. உள்ளூருக்குச் செல்கின்ற இவர்கள் அப்பகுதிகளில் உப்பு, மீன் என்பனவற்றினைக் கொண்டு சென்று விற்பனை செய்ததுடன் அப்பகுதிகளிலிருந்து பாக்கு, அரிசி, நெல், மெழுகு என்பனவற்றினையும் கொள்வனவு செய்துவந்தனர். (மங்களரூபி.சி.2016) சில இஸ்லாமியர்கள் அரசாங்கப் பணிகளிலும் இணைந்திருந்தனர்.

போர்த்துக்கேயரது ஆவணங்களில் சுதேசிகள், பரதேசிகள் எனப்பட்ட இருவகையான இஸ்லாமியரைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அதில் ஆரம்பகாலங்களில் குடியேறியிருந்தவர்கள் சுதேசிகளாகவும் தென்னிந்தியாவுடன் தொடர்புடையவர்கள் பரதேசிகளாகவும் போர்த்துக்கேயரால் அடையாளப்படுத்தப்பட்டனர். போர்த்துக்கேயர் இலங்கைவந்த சமயத்தில் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலே நடைபெற்று வந்த வர்த்தகமானது மேறகூறப்பட்ட தென்னிந்தியத்

தொடர்புடைய இஸ்லாமியரிடமே காணப்பட்டது. அவர்கள் இங்கிருந்து பாக்கு, தும்பு, மிளகு, கயிறு, யானைகள், வாசனைப் பொருட்களைக் கொண்டு சென்றதுடன் அங்கிருந்து துணிவகைகள், அரிசி, கருவாடு, எண்ணை முதலியவற்றினைக் கொண்டு வந்தனர். இவர்கள் சமகாலத்தில் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுடன் வர்த்தகத்திலும் ஈடுபட்டமை தெரிகின்றது. முத்துக்கள், இரத்தினக் கற்கள், யானைத் தந்தம் என்பனவற்றினை எடுத்துச் சென்று விற்பனை செய்தனர்.

**முடிவுரை**

வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் பல பகுதிகளிலும் வர்த்தக விருத்திக்கும் அரசியலுக்கும் இஸ்லாமியர்கள் தேவைப்பட்ட சமயங்களிலெல்லாம் அவர்கள் மீதான கொள்கையில் போர்த்துக்கேயர் தளர்வு காட்டினாரே தவிர அவர்கள்இஸ்லாமிய மக்களின்மீது அனுதாபம் கொண்டவர்களாக எக்காலத்திலும் இருக்கவில்லை. இஸ்லாமியர்கள் எப்போதும் அவர்களது நிலைப்பாட்டில் பரம வைரிகளே. அவ்வகையில் போர்த்துக்கேயரது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட வடஇலங்கை உள்ளிட்ட எப்பகுதிகளிலும் இஸ்லாமியர்கள் நின்மதியாக வாழவில்லை என்பதே உண்மை. அவ்வகையில் இஸ்லாமியர்களை அரவணைப்பதன் ஊடாக தமது பொருளாதார நலன்களை அவர்கள் பாதுகாத்துக்கொண்டனர். வழமையான பாரம்பரியமான தொழில்களை இஸ்லாமியர்கள் எச்சந்தர்பத்திலும் கைவிடவில்லை. அவற்றில் யானை வர்த்தகம், முத்து வர்த்தகம் என்பன பிரதான இடத்தினைப் பெற்றிருந்தன. கூடவே தங்களது பண்பாட்டினது அடையாளங்களையும் அவர்கள் கைவிடவில்லை.அவ்வகையில் இஸ்லாமியர்களினால் போர்த்துக்கேயரது பொருளாதார பலமும் அபிவிருத்தியும் அதிகரித்ததென்றே கூறுதல் வேண்டும். தொடர்ந்துவந்த ஒல்லாந்தரது காலங்களிலும் ஏறத்தாள இதேநிலைதான் இஸ்லாமியரது நிலைபாடு பொறுத்து அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**

**தமிழ்**

1. அப்துல்ரஹீம்,எம்.எஸ்.(2009), இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாச்சாரமும், இஸ்லாமிய புக் ஹவுஸ், கொழும்பு.

2. அப்துல் அஸீஸ், எல்.எம். (1907), இலங்கை சோனக இன வரலாறு, சோனக இலக்கிய கலாச்சார நிலையம்.

3. அருந்தவராஜா,க. (2012), யாழ்ப்பாண முஸ்லிம்கள், அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

4. இத்ரீஸ்,ஏ.பி.எம். (2011), சோனகர் தேசம் மிகச்சுருக்கமான அறிமுகம், சோனகம் வெளியீடு, வாழைச்சேனை.

5. காலிதீன்,கே.எம்.எச். (1986), இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, அகில இலங்கை கதிப்மார் சம்மேளனம்.

6. கிருஸ்ணராஜா,செ. (2002), இலங்கை வரலாறு, பாகம் இரண்டு, பிறைநிலா வெளியீடு,கோண்டாவில்.

7. குணசிங்கம்,மு. (2008) இலங்கையில் தமிழர், எம்.வி. வெளியீடு, சிட்னி.

8. சபாநாதன்,குல.(ப.ஆ), (1949), யாழ்ப்பாண வைபவமாலை, சுன்னாகம்.

9. சிவசாமி,வி. (1990), தீவகம் - ஒரு வரலாற்றுப் பார்வை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

10. சிவசாமி,வி. (2014), "யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்கால நிர்வாகமுறைகள்", இலங்கை வரலாறு (கட்டுரைகளின் தொகுப்பு), (ப.ஆ.அருந்தவராஜா,க) அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

11. சிற்றம்பலம்,சி.க. (1992), "சமயம்", யாழ்ப்பாண இராச்சியம், (ப.ஆ.சிற்றம்பலம்,சி.க). யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

12. நடராசா, க.செ. (ப.ஆ),(1980), வையாபாடல், கொழும்பு.

13. பத்மநாதன்,சி. (2001), இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும், குமரன் பதிப்பகம், சென்னை-கொழும்பு.

14.மங்களரூபி,சி. (2016), இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, சிவா வெளியீடு, யாழ்ப்பாணம்.

**English**

1. Maloney,C.T.(1970), ' The Beginnings of Civilization in South India' , The Journal of South Asian Studies.

2. Perera,S.G. (1943), A History ofCeylon, Colombo.

2. Silva,K.M.De.(1981), A History of Sri Lanka, Oxford University Press, Delhi.

3. Queyroz,Fernao De. (1930), The Temporal and Spiritual Conquest of Ceylon, trans.Perera,S.G, Colombo.